ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவனந்தபுரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவனந்தபுரம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## திருவாய்மொழி – கெடுமிடர்

‡ கெடும் இடராய எல்லாம் ⋆
கேசவா என்ன ⋆
நாளும் கொடு வினை செய்யும் ⋆
கூற்றின் தமர்களும் குறுககில்லார் ⋆
விடம் உடை அரவில் பள்ளி ⋆
விரும்பினான் சுரும்பலற்றும் ⋆
தடம் உடை வயல் ⋆
அனந்தபுர நகர் புகுதும் இன்றே ‖ **10.2.1** ‖

இன்று போய்ப் புகுதிர் ஆகில் ⋆
எழுமையும் ஏதம் சாரா ⋆
குன்று நேர் மாடம் ஆடே ⋆
குருந்து சேர் செருந்தி புன்னை ⋆
மன்றலர் பொழில் ⋆
அனந்தபுர நகர் மாயன் நாமம் ⋆
ஒன்றும் ஓர் ஆயிரமாம் ⋆
உள்ளுவார்க்கும்பர் ஊரே ‖ **10.2.2** ‖

ஊரும் புட் கொடியும் அஃதே ⋆
உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான் ⋆
சேரும் தண் அனந்தபுரம் ⋆
சிக்கெனப் புகுதிர் ஆகில் ⋆
தீரும் நோய் வினைகள் எல்லாம் ⋆
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் ⋆
பேரும் ஓர் ஆயிரத்துள் ⋆
ஒன்று நீர் பேசுமினே ॥ **10.2.3** ॥

பேசுமின் கூசம் இன்றிப் ⋆
பெரிய நீர் வேலை சூழ்ந்து ⋆
வாசமே கமழும் சோலை ⋆
வயல் அணி அனந்தபுரம் ⋆
நேசம் செய்துறைகின்றானை ⋆
நெறிமையால் மலர்கள் தூவி ⋆
பூசனை செய்கின்றார்கள் ⋆
புண்ணியம் செய்தவாறே ॥ **10.2.4** ॥

புண்ணியம் செய்து ⋆
நல்ல புனலொடு மலர்கள் தூவி ⋆
எண்ணுமின் எந்தை நாமம் ⋆
இப்பிறப்பறுக்கும் அப்பால் ⋆
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் ⋆
செறி பொழில் அனந்தபுரத்து ⋆
அண்ணலார் கமல பாதம் ⋆
அணுகுவார் அமரர் ஆவார் ॥ **10.2.5** ॥

அமரர் ஆய்த் திரிகின்றார்கட்கு ⋆
ஆதி சேர் அனந்தபுரத்து ⋆
அமரர் கோன் அர்ச்சிக்கின்று ⋆
அங்ககப்பணி செய்வர் விண்ணோர் ⋆
நமர்களோ ! சொல்லக் கேண்மின் ⋆
நாமும் போய் நணுகவேண்டும் ⋆
குமரனார் தாதை துன்பம் ⋆
துடைத்த கோவிந்தனாரே ॥ **10.2.6** ॥

துடைத்த கோவிந்தனாரே ⋆
உலகுயிர் தேவும் மற்றும் ⋆
படைத்த எம் பரம மூர்த்தி ⋆
பாம்பணைப் பள்ளி கொண்டான் ⋆
மடைத்தலை வாளை பாயும் ⋆
வயல் அணி அனந்தபுரம் ⋆
கடைத்தலை சீய்க்கப் பெற்றால் ⋆
கடு வினை களையலாமே ॥ **10.2.7** ॥

கடு வினை களையல் ஆகும் ⋆
காமனைப் பயந்த காளை ⋆
இடவகை கொண்டதென்பர் ⋆
எழில் அணி அனந்தபுரம் ⋆
படம் உடை அரவில் ⋆
பள்ளி பயின்றவன் பாதம் காண ⋆
நடமினோ நமர்கள் உள்ளீர் ! ⋆
நாம் உமக்கறியச் சொன்னோம் ॥ **10.2.8** ॥

நாம் உமக்கறியச் சொன்ன ⋆
நாள்களும் நணிய ஆன ⋆
சேமம் நன்குடைத்துக் கண்டீர் ⋆
செறி பொழில் அனந்தபுரம் ⋆
தூபநல் விரை மலர்கள் ⋆
துவளற ஆய்ந்து கொண்டு ⋆
வாமனன் அடிக்கென்றேத்த ⋆
மாய்ந்தறும் வினைகள் தாமே ‖ **10.2.9** ‖

மாய்ந்தறும் வினைகள் தாமே ⋆
மாதவா என்ன ⋆
நாளும் ஏய்ந்த பொன் மதிள் ⋆
அனந்தபுர நகர் எந்தைக்கென்று ⋆
சாந்தொடு விளக்கம் தூபம் ⋆
தாமரை மலர்கள் நல்ல ⋆
ஆய்ந்து கொண்டேத்த வல்லார் ⋆
அந்தமில் புகழினாரே ‖ **10.2.10** ‖

‡ அந்தமில் புகழ் ⋆
அனந்தபுர நகர் ஆதி தன்னை ⋆
கொந்தலர் பொழில் ⋆
குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள் ⋆
ஐந்தினோடைந்தும் வல்லார் ⋆
அணைவர் போய் அமர் உலகில் ⋆
பைந்தொடி மடந்தையர் தம் ⋆
வேய் மரு தோள் இணையே ‖ **10.2.11** ‖

**திரு ச்ரீகரிலக்ச்மீ சமேத அனந்தபத்மநாபன் திருவடிகளே சரணம்**